உளி-1 | ஓசை-53 | ஜூலை-2021 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

ஆசிரியர் : ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
மதன் குமார்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
✆94893 75575

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

அகதா - 4
அன்ஸார் எம்.எல்.எம் - 5
கதிரவன் வீ - 5
மழைக்குருவி - 6
ஆனந்தகுமார் - 7
முகமது பாட்சா - 8
சரண்யாசத்தியநாராயணன் - 9
குமரன்விஜி - 10
நித்யா சபரி - 11
உமா மஹேஸ்வரி பால்ராஜ் - 12
வெ.பூபதி - 13
இளங்கோ குமாரசாமி - 13
சௌவி - 14
தீபிகா நடராஜன் - 15
சகுந்தலா ஸ்ரீனிவாசன் - 15
சிபானா அஸீம் - 16
மகிழினி காயத்ரி - 17
ரிஸ்கா முக்தார் - 18
பிரபுசங்கர் க - 19
சந்துரு - 20
சொ.சாந்தி - 21
வீரமணி - 21
சே.தண்டபாணி தென்றல் - 22
மு.முபாரக் - 22
சம்பத் கிருஷ்ணகுமார் - 23
மா.காளிதாஸ் - 23
செ.புனிதஜோதி - 24
க.ராஜகுமாரன் - 25
காயத்ரி ராஜசேகர் - 26
சுப.முத்துக்குமார் - 27
சகா - 27
கயூரி புவிராசா - 28
பன்னீர்செல்வம் - 29
சோ.ஸ்ரீதரன் - 30
ஆ.சார்லஸ் - 31
தி.கலையரசி - 32
இளங்கவி நடுநாட்டுத்தமிழன் - 33
ஃபஷ்றி - 33
சுமைல் ஹரீஸ் - 34
ப்ரியா பாஸ்கரன் - 35
தேவிலிங்கம் - 36
நட்சத்திரப்பாடகன் - 36
புதுகை விஜய்ஆனந்த் - 37
முத்துக்குமார் சங்கரன் - 38
மதுரா - 39



திருமண நாளுக்குப்பிறகு
புகுந்த வீட்டில் பார்க்க வந்திருந்த
அப்பாவிற்கு மதிய விருந்தை
நான் சமைக்கும்போதே
முகம் சுண்டிப்போய்விட்டது

பரிமாறிக் கொண்டிருந்த கைகளில்
கடுகுப் பொரிந்து சுட்டவடுவும்
வடைசட்டிச் சூடுபட்ட
ஆறாத காயமும்
பார்த்த அதிர்ச்சியில்
சரியாக சாப்பிடவில்லை அவர்

போர்க்களத்திற்காகப் பயிற்சி அளித்த
இளவரசியை எதிரிநாட்டு இளவரசனிடம்
பறிகொடுத்த ராஜாவைப் போல
அவர் இருந்தார்

அன்றைய விருந்து
அதிக அளவில் உப்புக் கரித்தது
எனக்கும் அப்பாவுக்கும்

அகதா



சர்க்கரை வியாதிக்கு
மருந்து வாங்கினேன்.
மிகுதிப் பணத்திற்கு
மிட்டாய் கிடைத்தது!

**அன்ஸார் எம்.எல்.எம்**

திருடு போகும் வரை
அந்த சிலை
கடவுளாகத்தான் இருந்தது...

**கதிரவன் வீ**



இறுக்கி அணைச்சு ஒரு
உம்ம தருமோ

இந்தச் சொற்களுக்கு அர்த்தம் புரியாமல்
நாயகன் தடுமாறி அலைகிறான்
நான் அர்த்தம் புரிந்தும் அவனுடன்
சேர்ந்தலைகிறேன்

ஊருக்கு வழி கேட்கும் உடல்மொழியுடன்
அதே சொற்களைக் கேட்கிறான்
சொற்களின் அர்த்தம் மாறவே இல்லை

பிறகு ஒரு பெண்ணிடம் அதே உடல்மொழியுடன்
அதே சொற்களைச் சொல்கிறான்
இப்பொழுது சொற்கள்
ருத்ரதாண்டவம் ஆடுகின்றன

பிறகு ஒரு பண்ணையாரிடம்
அந்த சொற்களை சொல்கிறான்
பண்ணையார் அந்த நான்கு சொற்களையும்
பூக்களை இணைத்து சரம் ஆக்குவது போல
இணைக்கிறார்

அந்த சொற்களில் இருந்து அமைதியாக
ஒரு பெருஞ்சத்தம் வருகிறது

அர்த்தம் புரிகிறது
நாயகனுக்கும் எனக்கும் நெஞ்சில்
கனல் மூள்கிறது
அந்த நான்கு சொற்களின் கண்கள்
சிவந்து போயிருக்கின்றன

நாயகன் காற்றைப்போல சுழன்றோடுகிறான்
எனக்கு மூச்சு வாங்குகிறது

நாயகனும் நாயகியும் மலையிலிருந்து
உருள்கிறார்கள்
இடையில் நசுங்கும் சொற்களுக்கு
மூச்சுத் திணறுகிறது
வெடித்த குடத்தில் இருக்கும் மணிகளாக
நாற்புறமும் சிதறி ஓடுகிறேன் நான்
இறுதியில் ஒரு ஆறாக மாறி இருவரையும்
தாங்கிக் கொள்கிறேன்

நான்கு இதழ்களும் ஒன்றையொன்று
இறுக்கி அணைத்துக் கொள்கின்றன
இப்போதந்த நான்கு சொற்கள்
உன்மத்தமாகி காற்றில் கரைகின்றன

நான் எங்கு இருக்கிறேன் என்பது
எனக்குத் தெரியவில்லை

இப்போது
காற்றெங்கிலும் ஒரே வாசம்
ஆ..
இறுக்கி அணைச்சு ஒரு
உம்ம தருமோ.

மழைக்குருவி



உன்னுடன் சேர்ந்து
புகைப்படம் எதுவும் எடுத்து
கொண்டதில்லை..
அலைபேசிக்கெல்லாம்
முந்தைய காலமது..

தோளுக்கு மேல்..
வளர்ந்து நான்
தோழன் ஆவதை
பார்க்கவில்லை....

உடைந்து விழுகிற
போதெல்லாம்
அடிபடாமல் தாங்க
உன்போல்
யாருமில்லை..

நண்பர்கள் தந்தையை
கம்பீரமாய்
அறிமுகம் செய்கிற
போதெல்லாம்..
வெறுமை தளும்பி
வழிந்தது..

நீ இல்லாததால்..
சாதிப்பது மறந்து
வாழ்வதற்கே போராடிய
காலங்கள் நீளமானவை..

முதல் சம்பளத்தில்
உனக்கு அரைக்கை சட்டை..
பிடித்த இசை கேட்க
ப்ளூடூத் ஹெட்செட்..
புதிதாய் வாங்கிய காரில்
உனை வைத்து முதல் ரவுண்ட்..

இப்படி நிரம்பி வழிகிற
ஆசைகள் நிறைவேறாமல்
உயிர்வாழ்கிறது..

அதனால்தான் இப்போதெல்லாம்
மறக்காமல் முகக்கவசம் அணிகிறேன்..
அரைமணிக்கொருமுறை
கைகழுவுகிறேன்..
சமூக இடைவெளியோடு..

என் மகன் இன்னும்
தோளுக்கு மேல் வளரவில்லை...

ஆனந்தகுமார்



**வ**ழி மறித்துக் கேட்ட ஒற்றனின் காதுகள்
எப்போதும்
செவிடாகவே இருக்கிறது!

உப்பு காரம் விலையேற்றத்தில்
என்ன சுவாரசியம் இருந்துவிடப் போகிறது?
சுரணையற்றப் பிறகு!

வீட்டை விற்று
பெட்ரோல் வாங்கி வண்டியைக்
காப்பாற்றிக் கொண்டவன் தகவல் நமக்கெதற்கு?

வீடே இல்லாதவனுக்கு
நாடேயில்லை என்றவனிடம் என்னத் தகவல்
தேசியக் குற்றமாகத் திருட முடியும்?

திருவோட்டுச் சப்தங்களைக் கேட்டு
அரண்மனை கஜானா
என்ன பொழிப்புரை எழுதப் போகிறது!

திருடனிடம்
பெகாஸ் காதுகளை வாங்கும் முன்பு
அவன் கைகளில் வழிவது
சீழென்று மன்னருக்குத் தெரியுமா?
.


முகமது பாட்சா



புறா முணங்க
வேண்டுமென்ற அவசியமேயில்லை
நேரத்திற்கு தானியங்களை
வாசலில் இரைத்துவிடுவாள்
அவ்வீட்டின் சிறுமி..
ம்மா...யென்று அழைப்பதற்கு முன்
மாட்டிற்கு புல்லும் புண்ணாக்குகளும்
தயார் நிலையில் வைத்துவிடுவான் அவ்வீட்டின்
தகப்பன்..
காகம் கரைவதற்கு அரை மணிக்கு
முன்னமே மொட்டை மாடியில்
ஒரு கவளம் சாதம் வைத்து விடுவாள்
அவ்வீட்டின் அம்மா...
ஜன்னலின் வழியே
இறக்கைகளின் சத்தம் கொஞ்சம் படப்படக்க கூடாது
உடனேயே கோடை கொளுத்துகின்றது
பாவம் பச்சிகளென்று
தண்ணீர் சேகரித்து சுற்றுச்சுவரில் வைத்துவிடுவாள்
அவ்வீட்டின் மூத்த கன்னி..
பெருமைபடாதீர்கள்..!
வெகுநேரமாய் அவ்வீட்டிலிருந்து தான்
இரு முதியவர்களின் இருமல் சத்தமும்
கேட்டுக்கொண்டிருக்கின்றது.

சரண்யாசத்தியநாராயணன்

# அவ்வழித்தடம்



கடைசி சந்திப்பை
வளர்ந்த மரங்கள் கண்டன
கண்கள் காண்பதெல்லாம்
பேச்செனில்
இதுவரை
நாம் பேசியது என்ன பார்வை
வாசித்த புத்தகத்தை
நேசித்து கிழித்ததில்
பச்சிலையில் நான் கிழிந்த காயம்
சேர்ந்திருந்த காரண
வாசலின் விழும்பில்
பிரிந்திட பூசும் சேற்றை
யாரும் துடைத்துக் கொள்ளத்தான்
வேண்டுமல்லவா
ஒரு உயிரைப் பிரிவது
எவ்வளவு வலி
தலை துண்டிக்கப்பட்ட
சேவலை நீ இன்னும் பார்த்ததில்லை
இறுதியாய் எனைக் கண்ட கண்களுடன்
மணவூர் கண்டு சேர்ந்திடுவாய்
நானெங்கு சேர்வது
உறைந்து கிடக்கிறது காதலறுந்த அவ்வழித்தடம்.

குமரன்விஜி

# அம்மாவின் பசி



அடுப்பை பற்ற வைத்து
ஆரம்பத்தில் ஊற்றிய
அரை வேக்காட்டு
தோசையும்

பிள்ளைகள் சாப்பிட்டு
மிச்சம் வைத்த
ஒரு பாதி தோசையும்

கடைசியாக ஊற்றி
கவனியாமல் விட்ட கருகிய தோசையொன்றுமே
போதுமானது அம்மாவின்
பசி தீர்க்க...!

நித்யா சபரி



**தி**ன்று கொண்டிருந்த
மௌனப்பேய்க்கு
தீனியாய் எதைப் போட?

அவ்வளவு இரைச்சலையும்
மிடறு மிடறாய் பருகித்தீர்த்த
போதும்,போதும் என்ற மனம்
இல்லை

இன்னுமான குருதி மிச்சம்
முடித்தப்பின் அடங்கிப்போகுமா
உயிர் வாதை

சுற்றிச் சுழற்றியோர் அசைவுப்
பந்தாய் எட்டியுதைத்துப் போகும்
மனச்சேகரங்களை மடுவாய்
குவித்து வைக்க

கானல் புரட்டிப்போகும் புழுதிமனம்
நின்று பிடித்த என் வானத்தில்
நான் பேசிக்கொள்ள,
அரற்றிக் கொள்ள வேண்டும் இன்றுமோர் புத்தப்
பூர்ணிமை...

உமா மஹேஸ்வரி பால்ராஜ்



**சு**யம் உணர்ந்த ஜீவன்கள் மேற்கொள்ளும்
பயணத்தில் அனுபவமாவது எல்லாம்
அந்தந்த நொடி அதிசயங்கள்
பகிரதலின் பரிபூரணங்கள்
அவை குறித்த சிலாகிப்புகளோ
ஞாபகப்படுத்தல்களோ
திரும்ப நிகழ வேண்டிய எதிர்பார்ப்புகளோ
தொடராதது குறித்த
வருத்தங்களோ அவசியமில்லை
அப்படியே ஏற்றுக்கொண்டு
நகர்தலே சிறப்பு
பயணம் தொடரும் வரை
முன்தீர்மானமற்ற மாயங்களும்
சுவாரஸ்யங்களும் தொடரும்!

வெ.பூபதி

**பு**துப்புது எதிரிகள்
மாறும் இலக்குகள்
எதைஎதையோ
துரத்திக்கொண்டே
இருக்கிறோம்..
யார்யாருக்கோ
பயந்து ஓடுகிறோம்...
வலியும் வேதனையும்
நிறைந்த போர்க்களத்தை
மனசாட்சியில்லாமல்
கூறுகிறார்கள்
வாழ்க்கையென்று..!

இளங்கோ குமாரசாமி



**த**டியூன்றி எழுந்து செல்கிறாள்
சத்திரத்தில் வாழும்
வீடற்ற முதியவள்
அவள் குவளையில் தன் அலகுசெலுத்தி
நீருறிஞ்சிய காகம்
அவளை ஆசிர்வதித்துவிட்டு நகர்கிறது

தடியூன்றி ஊன்றி
மெதுவாக நடந்தவள்
நாலு வீட்டில் கிடைத்த உணவுகளோடு திரும்பி
சாப்பிட்டுவிட்டு மீதி இட்லியை
பார்த்துக்கொண்டே அமர்ந்திருக்கும் நாய்க்குப்
பகர்கிறாள்
பசியாறிய நாய்
அவளை ஆசிர்வதித்துவிட்டு நகர்கிறது

மெல்லப்படுக்கும் அவள் பக்கத்தில்
வந்தமர்ந்த சிட்டுக்குருவிகள்
அவள் சிந்திய பருக்கைகளைப்
பொறுக்கிக்கொண்டு
அவளை ஆசிர்வதித்துவிட்டு நகர்கின்றன

எப்படியோ வாசனை பிடித்து
எங்கிருந்தோ வந்த பூனை
அவளின் மூடியற்ற கிண்ணமொன்றில்
வைக்கப்பட்டிருந்த தயிரைக் குடித்துவிட்டு
தூங்கிக்கொண்டிருக்குமவளை
ஆசிர்வதித்துவிட்டு நகர்கிறது

வரிசையாய் சுவற்றிலிருந்து இறங்கும் எறும்புகள்
காகிதத்தில் சேமிக்கப்பட்ட சர்க்கரையை
ஆளுக்கொன்று எடுத்துக்கொண்டு
அவளை ஆசிர்வதித்துவிட்டு நகர்கின்றன

அவளுக்கு எந்த ஊர்
எத்தனை குழந்தைகள்
யாருக்கும் தெரியாது
மனிதர்களால் கைவிடப்பட்டவளை
மற்ற இனங்கள் தினம் தினம்
ஆசிர்வதித்துக்கொண்டேயிருக்கின்றன

அந்த ஆசிர்வாதங்களில்
அவள் ஆனந்தமாய் உறங்குகிறாள்
அவளின் தூக்கத்தைக் கலைத்துவிடாதீர்கள்

*சௌவி*



**நா**ன் இப்படித்தானென
முகமூடி களைந்து
முதுகில் குத்துபவன் மேல்
எனக்கெந்த கவலையும் இல்லை!
மாறாக,
என் பெரும் நம்பிக்கைகளின் மேல்
அவ்வப்போது
கல்லெறிந்து போகிறவர்களிடம் தான்
அத்தனை களைத்து போகிறேன்...

◖ தீபிகா நடராஜன்

**வி**ழுந்து கிடக்கும்
மலர்களுக்கும்
இலைகளுக்கும்
நடுவில் சுற்றித்திரியும்
ஒற்றை எறும்பினைப்போல்
ஊர்ந்துக்கொண்டிருக்கிறேன்..

எந்நேரமும் பெருமழையொன்று
வருவதற்கான முகாந்திரத்தை
ஏற்படுத்தி தருகிறது மனது..

என் விழிகளுக்கான பருவமழையை
உன் வருகையினால் பொய்த்து விடச்செய்...

◖ சகுந்தலா ஸ்ரீனிவாசன்



எப்போதும்
அவள்
தன் தேநீர்க்கோப்பையை
தான் ஊறி ஊறி
சுவாசித்த ஒரு
வாசனையைக்கொண்டுதான்
நிரப்பிக்கொள்வாள்

இப்போதும்
அவள்
தான் வரைந்திடும்
ஓவியத்திற்கு
காற்றை தண்ணீரில்
குழைத்துதான்
நிறமேற்றுவாள்

இன்னும்
அவள்
தன் நடைப்பயணத்தை
ஒரு சில கற்பனைகளை
கைப்பிடித்துக்கொண்டேதான்
தொடர்கிறாள்

அவளுக்கோ
தன் நம்பிக்கைகளை
சற்றேனும்
தளரவிடுவதில் அத்தனை
விருப்பமில்லை

சிபானா அஸீம்



ஆடாது அசங்காது
சிறுவனின்
நெற்றி வருடலை
தீரா விடாயோடு
படையலாய்
பருகிக் கொண்டிருக்கும்
ஆட்டுக்குட்டியின் சாயல்

குதிரை மேலேறி
கொடுவாள் மீசையோடு
வாளேந்தி நிற்கும்
ஐயனாருக்கு

பீடம் பிடித்து
சுற்றி வந்து
சட்டென்று
தாவிக்குதித்து
தாடை தடவிப் பார்த்து
சிலிர்க்கும்
குழந்தையொன்றுடனான
காலத்தின்
கனிந்து கிடக்கும்
நொடியொன்றில் !

**மகிழினி காயத்ரி**



வரவிருக்கும் உன் பிறந்தநாளுக்கு
நானொரு வாழ்த்தையேனும்
அனுப்பப்போவதில்லை
ஏனெனில்
கடந்த தினத்திலொரு நாள்
கடந்த என் பிறந்தநாளை
நீ மறந்துதான் போயிருந்தாய்

நீயாய் அழைக்கும் வரை
நானொருபோதும் உன்னை
அழைக்கப்போவதில்லை
ஏனெனில்
இறுதியாய் தொடர்பைத் துண்டித்துக்கொண்டு
வெளியேறியதென்னவோ
நீயேதான்

உன் நலமறிய உன் நண்பர்களை இனியொரு
நாளும் நான் தேடப்போவதில்லை
ஏனெனில்
என் நண்பர்கள் யார் யாரென்பதையே
நீ அறிந்திருக்கவில்லை

அறிந்தும்
அறியாமலும்

இப்படித்தான்
ஒவ்வொன்றாய் தொலைத்து வந்தோம்
இப்படித்தான்
ஒவ்வொன்றாய் இழந்து நின்றோம்
இல்லையா??

எனினும்
எக்காலத்திலும்
மனம் நீர்த்துப்போய்
இதுபோல
பிறிதொருபோதும்
நாம்
கதவடைத்துக்கொண்டதே
இல்லை!!!

ரிஸ்கா முக்தார்



அதிக வெளிச்சம் தரும்
மின்விளக்குகள் பளிச்சிட
தனித்தனி பிரிவுகளில்
பொருட்களுக்கு ஏற்ப
வரிசையாய் அடுக்கப்பட்டிருக்கும்
சூப்பர் மார்க்கெட்டை
மருண்ட விழிகளில் பார்க்கிறாள்
முதல்முறையாக நுழைந்த அம்மா
நூறு கிராம் கடலை பருப்பும்
கால்கிலோ ரவையும்
தேங்காய் பத்தையும்
அண்ணாச்சி கடையில் வாங்கியவளுக்கு
இதன் பிரம்மாண்டம்
ஆச்சரியத்தை தந்திருக்க வேண்டும்
அமைதியாகவே இருந்தவள்
திண்பண்டங்களுக்கென அமைக்கப்பட்டிருந்த
பிரிவை பார்த்ததும்
“நொறுக்கு தீனி வாங்கவா இம்புட்டு பெரிசா
வெச்சிருக்காங்க”
ஏற்றுக்கொள்ள முடியாமல்
புலம்பிக்கொண்டு வந்தாள்
அன்றைய நாட்களில்
திருமண விருந்தில் புடவை மடிப்பில்
அவள் எடுத்து வந்த இனிப்புகளும்
வாழைப்பழங்களும்
காலம் களவாடிய எளிமையும்
தோன்றி மறைகிறது
என் நினைவுகளில்......

பிரபுசங்கர் க



முப்பதாம் பக்கத்தில்
மறைத்து வைத்த மயிலிறகு
குட்டி போட்டிருப்பதாய்
காட்டியபோது
நண்பனின் கண்களில் வழிந்த
பொறாமையில்
என் முப்பதாம் பக்கம்
தாய்மையடைந்திருந்தது
.
நான்கைந்து நாட்களில்
நண்பனின் மயிலிறகு
இரண்டு சிறிய குட்டிகள்
போட்டிருந்ததை கண்டு
வகுப்பறையே வாய்பிளந்த போது
நானும் நம்பி...
மலடாயிருந்த
என் மயிலிறகை வீசிவிட்டு
வேறொன்றை
அடைகாக்கத் தொடங்கினேன்...
.
என்னை ஏமாற்றவே
நண்பனின் புத்தகம்
இரண்டு மயிலிறகை
ஈன்றெடுத்த ரகசியமும்
நான் சொன்ன பொய்யும்
அந்த வயதில்
இருவருக்கும் தெரியவில்லை...
.
எனினும்
மயிலிறகு
குட்டிப்போடும் என்பதை
இன்னும் கூட ஏனோ
அனிச்சையாய் நம்பிக்கொண்டிருக்கிறது
ஆழ் மனம்...
.
உங்கள் மயிலிறகு
உண்மையிலேயே
குட்டி ஈன்றிருந்தால்
யாராவது சொல்லுங்களேன்..!

சந்துரு



நீள்கிறது
தோள்வரை
வெறுங்கையால் முழம்.!

கரைகிறது குயில்
சிறகுகள் முளைக்கும் வரை
காக்கை கூட்டில்

சொ.சாந்தி

பிறந்த ஊரிலிருந்து
மண்ணெடுத்து வந்து
தொட்டிச்செடி வளர்த்தேன்
மலர்ந்த பூக்களில்
எல்லாம்
தாய்ப்பாலின் வாசம்

வீரமணி



உயிர்த்தெழும்
ஒவ்வொரு கவிதையிலும்
எதாவதொரு
சொல்லுக்குள்
உன்னைப் பூட்டி வைத்திருக்கிறேன்.
நினைவுப் பாதைக்குள்
வருவோர்
நிழலில் நிற்கின்றனர்
மரத்தின் கிளைகளாக
உன் கைகளை
அசைத்தபடியே
நிறைவடைகிறது இக்கவிதை

*சே.தண்டபாணி தென்றல்*

மரணத்திற்கு முன்பு அப்பா
பேசிய
கடைசி வார்த்தையை,
இப்போதெல்லாம் என்னோடு அழைத்துக் கொண்டே
அலைகிறேன்...
அப்பாவை தொலைத்து விட்டு
அலைவதைப் போல!

*மு.முபாரக்*



**ஆ**ணாதிக்கத்தின்
மீதேறி
அழுந்த மிதிக்கிறாள்
கம்பி வைத்த
சைக்கிளில்
செல்லும் சிறுமி.

◖ சம்பத் கிருஷ்ணகுமார்

**கொ**ளுத்தும் வெயிலுக்கு
நிழலில்
ஒரு குவளைத் தண்ணீர்
வைக்காத புகாரை
அலகின் நுனியில் சுமந்தபடி
மரக்கிளையில் மறைந்திருக்கும் காகம், போலிக்
குரலில்
அமாவாசைச் சோறெடுக்க
அழைப்பவனைப் புறக்கணித்து
அடுத்த இலைக்கு நகரும் போது,
“அவுகளுக்கு
வறட்டுக் கௌரவம் ஜாஸ்தி,
நீ வந்து விரதம் முடி”
என்கிறாள் அம்மா.

◖ மா.காளிதாஸ்



சின்ன வானம்
ஒரு துண்டு சூரியன்,
மூக்குத்தி நட்சத்திரங்கள்,
சிறியவானவில்,
அரைத்துண்டு நிலா,
பறக்கும் பறவை
பலவண்ணப்பூக்கள்,
நிழல்தரும் தென்னை, சிறியகடல்,குட்டிப்படகு
சின்னகுடில்,
கரம்கோர்த்துக்கிடக்கும்
உறவு

அவளுக்கான உலகத்தில்
அத்தனையும் ஒன்று இணைத்து
விடுகிறாள் பிஞ்சுவிரலால்

எனக்கான உலகத்தில் அத்தனையும் எட்ட நிற்கிறது

செ.புனிதஜோதி

# கஸல்



பிரிவின் முட்கள் நடுவில்
நெருக்கமாக கண்ணீர் மலர்கள்

என் இரவை நெய்கிறது
அவளில்லாத பகல்

திரும்பி பார்த்தபடி சென்றுவிட்ட
புன்னகையைத்தான் நான் நிலவென்று நம்பினேன்

உன்னை பேசும் போது
துயரின்புல்லாங்குழல் விழித்துக்கொள்கிறது

நிஜமென்று நம்பினாலும்
வண்ணம் கரைந்துதானே போகும் வானவில்

மௌனம் வேர் பிடிக்க
தெருப்பாடகனின் குரல்
இலையிழந்த கிளையின் ராகம்

க.ராஜகுமாரன்



அவனுக்குக் காதலின் மரணம்
தாங்கொணாத் துயராயிருந்தது
எனக்கு வெளிவந்துவிடுவேனெனும் நம்பிக்கை
மிகுந்திருந்தது
அவன் நண்பர்களிடம் புலம்பிக் கொண்டிருக்கையில்
நான் புது வாழ்வில்
சமாளித்தபடியிருந்தேன்
அவன் புகைக்கத் தொடங்கியிருந்தான்
எனை வெறுக்கத் தொடங்கும் விதமாக
நான் சோகப் பாடல்களில் திளைத்திருந்தேன்
அவன் குடியைக் கையிலெடுத்திருந்தான்
என்னிலும் அது அவனுக்கு
போதை தந்தது
நான் கவிதை நூல்கள்
வாங்கத் தொடங்கியிருந்தேன்
அவன் வெளிநாடு செல்ல
அலைந்து கொண்டிருந்தான்
நான் கவிதையெழுதக் கற்றிருந்தேன்
அவன் லௌகீகத்தில்
சாயத் தொடங்கிய நேரம்
நான் துயர்மிகு கவிதைகளில் என்னைக்
கரைத்திருந்தேன்.

காயத்ரி ராஜசேகர்



**மி**தந்து கொண்டிருக்கும்
தக்கையின் தவத்தைக்
கலைக்கிறது
அடியில் திரியும் பசி.

சுப.முத்துக்குமார்

**கா**லம் கடந்து பார்த்த
பால்ய சினேகிதியின்
பரபரப்பில்
ஒளிந்து கிடக்கிறது,
ஆண்டுகளாய்
புதைந்து கிடக்கும்
அந்த ஒரு நொடி மௌனம்...

சகா



எரியக் காத்திருக்கும் பெருங்காட்டு
சருகசைவில் குவிந்து மிதந்துகொண்டிருக்கும்
மகத்தான
ஏக்கங்கள்

நீர் உருண்டு உருண்டு
நழுவும் குளத்துப் படிக்கட்டுகளில்
அசையாத காலமாய் மழைக்கால
குருவிகளின் அச்சம்

வளையும் மயில் கழுத்திலே புதைந்து
காற்று எழும் ஓசையில்
அந்த மயிற்பீலிக் குஞ்சுகளோடு
என்றேனுமொரு பொழுது
கழியும் தானே

நஞ்சுண்ட நீலக்கழுத்தில் தான்
தாட்சாயணியின் பெருமோகம்
கனன்றுகொண்டிருக்கிறது

கயூரி புவிராசா



மனப்பட்டறை...
நல்ல பழுத்த கங்குகளின் அனல்...

சிந்தனைத்துண்டொன்று
புடம்போடப்பட்டது...

தகதகவென தனல்
உருகி ஒடும் ஓர் வெப்பநிலை...

கிடிக்கியால்
இறுக்கிப் பிடித்து நினைவு
சம்மட்டியால்
ஓங்கி ஓங்கி அடித்ததில்...

சிந்தனை சில்லுகள் சிதறின...
சாம்பலாகிப்போன குப்பைகள் தவிர
மற்றவை உறுத்தேறும் வாழ்க்கைக்கு...

"தக்கன பிழைக்கும்"
டார்வின் இயற்பியல் கோட்பாடு...
ஆம்
தகுதியானவை மட்டுமே நிலைக்கும்..

மனப்பட்டறை சுத்தமானது....
மட புத்திகள் எரிந்துப்போயின...
மனபுத்தி
கோமாளி யென நினைக்கிறேன்.....!

பன்னீர்செல்வம்

# தொலைந்த இரவு



விடியலில்
வீட்டுக்கு வந்த
வெளிச்சம்!
இருளின் கறுப்பை
அள்ளி வெளியே...
வீசியது!

வெளியே சென்ற இருள்
வெளிச்சத்திற்குள்
தொலைந்து போனது!

இரவில்
படுக்கைக்கு வந்த
கனவு
சுகமான நினைவுகளைத்
தந்துவிட்டு
இரவைத்தேடி
எங்கையோ...சென்றது!

படுத்த பாய் - நான்
எழும்பிய போது
சுருண்டு கொண்டது !
பகலில்...
அதற்கு
வேலையில்லாததால்!


சாளரச் சந்துகளில்
எட்டிப்பார்த்த
பனித்துளிகளை
எட்டிப் பிடித்தேன்!
வலியால்
பனித்துளிகள் அழுதன!
என் கையெல்லாம்
ஒரேஈரம்!

கூரையின்
ஓட்டைகளின் மூலம்
வீட்டினுள் பல
சூரியன்கள் முளைத்தன!
அவைகளை
மிதித்தபோதும்
பாதங்கள் சுடவில்லை!

வீட்டின் கதவிற்கு
வெளியே ஒரேசிரிப்பு...
கதவை திறந்தேன்...!
காலைப்பொழுது.
களிப்புடன் என்னை
கட்டியணைத்துக்
கொண்டது!

*சோ.ஶ்ரீதரன்*

# நம்பிக்கை விளக்குகள்



மனிதர்கள்
அவர்தம்,
வேண்டுதல்களால் நிரப்பி
நீரில்,
மிதக்கவிட்டுச்சென்ற
நம்பிக்கை விளக்குகளை,
வானிலிருந்து
கடவுள்
பார்த்துக்கொண்டிருக்கிறார்.

கடைசி வரையிலும்
நம்பிக்கை குறையாத,
நல் விளக்குகளின்
வேண்டுதல்கள்,
நிறைவேற்றப்படுகின்றன.

அடுத்த முறை
அவைகளின் எண்ணிக்கை
அதிகமாகிவிடுகிறது.

கடவுளும்
புன்முறுவலோடு
பார்த்துக்கொண்டிருக்கிறார்,
அணையாத
நம்பிக்கை விளக்குகளை.!

ஆ.சார்லஸ்



என் தெருவின் ஒருமுனை
ஆற்றங்கரையில் முடிவடைகிறது

கரையோரம் இருக்கும்
கங்கையம்மனின் அருளால்
வானம்
பருவந்தோறும்
மழையைப் பிரசவிக்கிறது

பிரசித்தி பெற்ற
கோவில் திருவிழாவில்
அலைமோதும் கூட்டம்
பிரத்யேகமானது

ஆற்றோரத்தை
அலங்கரிக்கும்
திருவிழாக் கடைகளும்
வான வேடிக்கைகளும்
கண்ணைப் பறிக்கும் என

விதவிதமாக
வெளியூர் நண்பனிடம்
ஆற்றங்கரைப் பெருமைகளை
அளந்து கொண்டே இருந்தேன்

இறுதி வரை
ஆற்று நீரைப் பற்றி
நானும் சொல்லவில்லை
அவனும் கேட்கவில்லை.

தி.கலையரசி

# அடவு....



**வே**கமாய் ஊண்றிய கால்
தெரித்துச் சிதறும் மண் திவலை
கம்பீர உடலோடு
சுற்றப்பட்ட கலர்துணி
கனீரென்று கத்தும் கழுத்திலி சலங்கை
அரிதாரம் அப்பிய
ஆகோர ரூபம்
கையில் கெதையும் வாளும்
மெட்டுக்கு தாளத்தை
மிதமாய் அடித்ததனால்
கொட்டும் கூத்தும்
குறையாகிப்போக
ஏதோ சொல்லவந்த காற்று
காதுக் கம்மலுக்கு
அடவு போடக் கற்றுக் கொடுத்துவிட்டுச் சென்றது....

இளங்கவி நடுநாட்டுத்தமிழன்

**ம**ரத்தின் கிளையொன்றில்
இரு கால்களுக்கும் இடையில்
என் மகன் வீசிய பிஸ்கட் துண்டொன்றை வைத்து
கொஞ்சம் கொஞ்சமாகக்
கொறித்துக் கொண்டிருக்கிறது காகம்.
என்னை
வாழ்வு
கொஞ்சம் கொஞ்சமாக
கொறித்துக் கொண்டிருப்பது போல.

ஃபஷ்றி



கண்ணீரைப் பரிசளித்தவர்கள்
மன்னிப்பை வேண்டி நிற்கும் போது
அவர்களை மன்னித்து விடுங்கள்...

ஆனால் மீண்டும் அவர்களை
உங்கள் வாழ்விதயத்தோடு
இணைத்துக் கொள்ளாதீர்கள்..

சடுதியாய் மாறும் ஓர் எண்ணப்பிறழ்வில்
வற்றிய கண்ணீரின் தடயத்தில் இரத்தத்தின்
துமிகளை நிரப்பிவிடுவார்கள்..

முடிந்துபோன அந்த வாழ்வும்
வேண்டாம் அதே கண்ணீரும்
வேண்டாம் அவர்கள் அவர்களாகவே
இருக்கட்டும்...

நீங்கள் நீங்களாகவே இருங்கள்

**சுமைல் ஹரீஸ்**

# சாம்பல் பூத்த கவிதைக்குள் நான்



சூரியன் உமிழ்ந்த எச்சத்தில்
ஒளிர்கிறது நிலவு

கவிதைத் தீயின்
கதகதப்பில் உயிர்த்திருக்கிறேன்

சுடர்களின் நடனத்தில்
போதை ஏறுகிறது

தீக்குழியில் இறங்கும் பக்தனாய்
தீயின் கங்குடன் ஐக்கியமாகிறேன்

எங்கிருந்தோ வந்த
தூக்க விலங்கொன்று என்னைக் கௌவிக்கொண்டு
போய்
சப்பி தின்று விழுங்குகிறது

பாலில் நெய் மறைந்திருப்பதாய்
உறைந்திருக்கிறது கவிதை
என்னுள்
சாம்பல் பூத்து.

ப்ரியா பாஸ்கரன்



**க**வளம் மெல்லுகையில் கடிபடும் நாக்கென..
சில குரூரங்களில் மௌனமாய்
திருப்திக்கொள்கின்றன மனங்கள்...

நிறம் குறைந்ததால் வரன்
தேடி அலைதல் நிலை
எனவும்
குள்ளமென
கூடுதல்
சவரன்  எனவும்...

வாய்ச்சவடால்
தூரத்து மாமனை
விரட்டவழியின்றி வேதனையாய்
விட்டத்தைப்பார்க்கையில் தான்..

வெகுண்டெழுந்து “வவ் “என அவரின்
கணுக்காலைக் கடித்துவைத்தது கறுப்பி..

வாலை மிதிக்கையில் கம்மென்றிருக்க
கறுப்பு மேனகாவா அது...

**தேவிலிங்கம்**

**உ**ன் இரக்கமில்லா
துரோகத்திற்கு
என் தனிப்பெருங்காதலே
உனக்கு ஆகச்சிறந்த
தண்டனை.

**நட்சத்திரப்பாடகன்**



உன் கற்றை குழல்
ஓயாது கரை தொடும்
அலைகளாகிறது ...

வலைவீசும் உன் கண்கள்
கெண்டையாகிட...
உன் நெஞ்சுக்குழிக்குள் எனை
வாரிச் சுருட்டுகிறாய்
அழிப்பேரலையாய்...

உன் திருவாய் மலர்ந்து
ஒரு வாய் மொழிந்திட
ஏனடி இன்னும் ஆழ்கடல்
மௌனம் கொள்கிறாய்..?!

புதுகை விஜய்ஆனந்த்



பக்தர்கள் சென்ற பின்
கர்ப்பக் கிரகம் நீங்கி
வெளியே வந்தான்
நந்தியின் அலங்காரம் காண


இன்னமும் ஓரிருவர்
நந்தியின் காதில்
இரகசியமாய் பிரார்த்திக்க
நந்தியின் வாய் மீது
தன் கன்னத்தைத் தேய்த்துக் கொண்டிருந்தாள்
அர்ச்சகரின் குழந்தை

கல்லின் கருமை மறைத்த
சந்தன அலங்காரம் கண்டவன்
குழந்தையின் கன்னத்தில்
இருந்த சந்தனத்தைத்
துடைத்த பின் கேட்டான்
"என்ன செய்கிறாய்?"

கேட்பவர் யாரென்று பாராமலே
பதில் சொன்னது குழந்தை
" உஷ் நந்தி என் காதில்
ரகசியம் சொல்கிறது"

நந்தியை அறிந்திடும்
ஆச்சரியத்தில் கேட்கிறான்
"என்ன ரகசியம்?"
குழந்தையின் பதில்
"சொல்ல மாட்டேன் யாரிடமும்
சொன்னால் பலிக்காது".

முத்துக்குமார் சங்கரன்



**வ**ழு வழுப்பான
கோடுகளை
வளைத்து வளைத்துப்
பார்க்கிறேன்..

எதுவும் வட்டமாகவில்லை.

இழுத்துப் பிடித்து
இணைத்த பின்னே
உருவாவதெல்லாம்
சதுரங்களும் முக்கோணங்களும்...

கொஞ்சம் பயிற்சியில்
கிடைத்ததென்னவோ
ஒரு அறுகோணம்..

ஆமாம் யார் சொன்னது
வாழ்க்கை ஒரு
வட்டமென்று?

மதுரா

படைப்பு
சமூகத்தின் இணைப்பு



# சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..